கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 08.12.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் "வேளாண் இடு பொருள் துறையில், உயிரி மற்றும் உயிரி தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகள்" என்ற தலைப்பில் கருத்தரங்கம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும், தாவர உயிரி தொழில்நுட்பத் துறை இணைந்து "வேளாண் இடு பொருள் துறையில், உயிரி மற்றும் உயிரி தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகள்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் 06.12.2025 அன்று நடத்தியது. கோர்டிவா அக்ரிசயின்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் மண்டல மேலாளர், திரு. கே. கார்த்திக் அவர்கள் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் 200–க்கும் மேற்பட்ட இளநிலை உயிரி தொழில்நுட்பவியல், உயிரி தகவலியல் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்குபெற்று பயனடைந்தனர்.

வேளாண் இடு பொருட்கள் துறையின் முக்கிய பிரிவுகளை அறிமுகப்படுத்தி, வளர்ந்து வரும் விவசாயப் போக்குகளை எடுத்துரைத்து, திரு.கே.கார்த்திக் தனது உரையை தொடங்கினார். உணவுப் பாதுகாப்பு மற்றும் காலநிலை தாக்கம் போன்ற விவசாயிகளின் முக்கிய சவால்களை நிவர்த்தி செய்யும் வகையில் விதை மற்றும் பயிர் பாதுகாப்பு துறைகளில் நிலையான தீர்வுகளை வழங்கி வரும் முன்னணி நிறுவனமான கோர்டிவா வின் உலகளாவிய பங்கை அவர் விளக்கினார். பூச்சி எதிர்ப்பு மேலாண்மை மற்றும் பயிர் மேம்பாட்டிற்கான மரபணு பொறியியலில் CRISPR, விவசாயத்தில் AI–ன் பயன்பாடு, மேலும், பாதுகாப்பு மதிப்பீடு மற்றும் சோதனைகளை உள்ளடக்கிய நீண்ட ஆராய்ச்சி செயல்முறைகளின் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

திரு. கே. கார்த்திக் அவர்கள் மாணவர்களுடனான கலந்துரையாடலில் உயிரி தொழில்நுட்பம் மற்றும் உயிரி தகவல் தொழில்நுட்ப துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளை கூறி அதனை சார்ந்த மென் திறன்களை வளர்க்கும் படி ஊக்குவித்தார். மேலும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் முதுகலை ஆராய்ச்சியாளர்களுக்கு கோர்டிவா இன்டர்ன்ஷிப்பை வழங்குகிறது என்றும் அவர் கூறினார். சரியான அளவு

மற்றும் முறையில் பயன்படுத்தும்போது பூச்சிக்கொல்லிகள் தீங்கு விளைவிப்பதில்லை என்பதை தெளிவுபடுத்தி அவர் முடித்தார்.

தொடக்க நிகழ்வில் தாவர உயிரித்தொழில்நுட்ப துறை துணை பேராசிரியர் முனைவர். வி. ராஜன்பாபு வரவேற்புரை நிகழ்த்தினார். உயிரி தொழில்நுட்ப சிறப்பு மையம் மற்றும் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின் இயக்குநர் முனைவர். என். செந்தில் தொடக்க உரையாற்றினார். தாவர உயிரிதொழில்நுட்ப துறை இணைப் பேராசிரியர் முனைவர் கே.ஹேமாப்ரபா, நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வை தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையம் மற்றும் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

.

**மக்கள் தொடர்பு அலுவலர்**